**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமங்களுடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த ரூபா 1,309,280 ஆன அன்பளிப்பை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் கண்க்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டப்பின்படிப்பு பாடநெறியை பூர்த்தி செய்ய வழங்கியுள்ள குறைந்தபட்ச காலப் பகுதியில் பாடநெறி கட்டண வருமானத்தை குறித்த ஆண்டு வருமானமாக இனங்காணல் மற்றும் உச்ச காலப் பகுதியினுள் அறவிடப்படாத வருமானத்தை பதிவழிப்பது நிறுவகத்தின் கொள்கையான போதும், 09 பாடநெறிகளிற்குரிய அக்காலப் பகுதியினுள் கிடைக்காத ரூபா 11,119,837 ஆன பாடநெறி கட்டண வருமானத்தை பதிவழிக்காது நிதிக்கூற்றிக்களில் நடைமுறை சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பட்டதாரி பாடநெறியை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த ஆகக்கூடிய கால எல்லையை விஞ்சி செயல்படும் மாணவர்களை 2023 ஆண்டினுள் மீண்டும் மீளாய்வு செய்து அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணத்தை அறவிட அல்லது கணக்கு புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடந்த ஆண்டில் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் கூடுதலாக குறிப்பிடப்பட்ட தவறை மீளாய்வாண்டினுள் சரி செய்யும் போது திரண்ட நிதியத்திற்கு மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கிற்கு தவறுடன் கூடியதாக முறையே வரவு மற்றும் செலவு வைத்ததன் காரணமாக திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கு ரூபா 514,315 இனால் முறையே குறைத்து மற்றும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஆம் பிரிவு | நிறுவகத்தினால் நடாத்தப்படும் 54 பட்டப்பின்படிப்பு பாடநெறிகளுக்காக மீளாய்வாண்டு இறுதிவரையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | 2019 திசெம்பர் மாதம் 4 ஆம் திகதி அங்கீகாரத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிய போதும் இது வரை அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை என. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக கல்விசார் ஆளணியின் நெறிமுறை மற்றும் கல்விசார் பொறுப்புக்கள் தொடர்பான வழிகாட்டிக் கொவை - 2015- 25 ஆம் வழிகாட்டி | விரிவுரை பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்கு இடையே இரட்டை தொடர்பு உண்டாகும் நிலைமைகளை வெளிப்படுத்திக் கொள்வதற்காக ஒழுங்கான முறைமையொன்றை நிறுவகத்தினால் செயற்படுத்தி இருக்கவில்லை. | அனைத்து விரிவுரையாளர்களுக்கும் நியமனக் கடிதம் வழங்கும் போது விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களிற்கு இடையில் இரட்டை தொடர்புகள் இருக்கக் கூடாத எனும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக. | வழிகாட்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 மார்ச் 01 இன் 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | | |
| | i. 4.5 பந்தி | 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலத்தினுள் செயற்படுத்திய 20 பாடநெறிகளிற்குரிய பாதீட்டு கூட்டு வருமானம் ரூபா 308,973,800 தொடர்பாக அப் பாடநெறி முடிவில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சுய நிதியீட்டல் செயற்பாடுகளின் ஒவ்வொறு பாடநெறிகளிற்கும் உரிய நிதிக்கூற்றுக்களை அப் பாடநெறி முடிவடையும் போது தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ii. 2 மற்றும் 4.5 பந்தி | பூச்சிய அடிப்படையின் (Zero Base) கீழ் சுய நிதியீட்டல் செயற்பாடுகளை பேணிச் செல்ல வேண்டுமென அறிவித்திருத்த போதும், 2018 சனவரி 01 திகதி முதல் 2022 ஒக்டேர்பர் 31 திகதி வரையான காலததினுள் செயற்படுத்திய சுய நிதியீட்டல் செயற்பாடுகளினூடாக கிடைத்த வருமானத்தில் ரூபா 185,673,375 வை குறித்த செயல்களுக்கு பயன்படுத்தாது 03 வர்த்தக வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு இருந்தது. | பாடநெறியொன்றிற்காக மாணவர்கள் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில் கிடைக்கும் நிதி காரணமாக தற்காலிக நிதி மிகையொன்று நிறுவகத்தினுள் காணப்படுவதால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் குறுகிய கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் PE/01/2021 கொண்ட பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 6.6 பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களினுள் நிறுவகத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையுடன் செயலாற்றுகை உள்ளிட்ட வருடாந்த அறிக்கையை மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய போதும், நிறுவகத்தினால் 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய வருடாந்த | 2020 வருடாந்த அறிக்கை 2023 மார்ச் மாதம் 29 திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்க ஒப்படைத்ததுடன் 2021 வருடாந்த அறிக்கையை அமைச்சு அறிவிக்கும் திகதியிற்கு | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிக்கை இது வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளதாக. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 57,708,492 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 69,316,679 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,608,187 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஊழியர் வேதனம் ரூபா 11,730,630 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டினுள் பட்டப்பின்படிப்பு பாடநெறிக்காக 75 சதவீதத்தினால், தத்துவவியல் பாடநெறிக்காக 95 சதவீதத்தினால் மற்றும் கலாநிதி பாடநெறிக்காக 83 சதவீதத்தினால் மாணவர் ஆட்சேர்ப்வு குறைந்துள்ளதுடன் வெளிநாட்டு மாணவர்கள் ஆட்சேர்ப்பதும் 33 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக 2022 ஆண்டிற்கு மாணவர்களை உள்ளெடுத்தலை 2023 சனவரி வரை பிப்போட நேர்ந்ததாக. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் மாணவர்களை ஆட்சேர்ப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 விளைவற்று அல்லத குறைப்பயன்பாட்டு ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| University Network for Disaster Risk Reduction and Management in Indian Ocean கருத்திட்டத்தை திட்டமிட்டவாறு ஆரம்பிக்காத காரணத்தால் அதற்காக கிடைத்திருந்த மானியங்களால் 2021 ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 6,271,631 ஆன உபகரணங்கள் ஓராண்டிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டன. | இக்கருத்திட்டத்திற்காக 2021 ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 6,271,361 பெறுமதியான உபகரணங்களை 2023 ஆண்டிலிருந்து பயன்படுத்துவதாக. | கருத்திட்ட எதிர்பார்த்த நோக்கத்திற்காக குறித்த உபகரணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| National Languages Equality Advancement Project (NLEAP) கருத்திட்டத்தை 2022 சனவரி 01 முதல் 2022 திசெம்பர் 31 வரையான காலத்தினுள் முடிவுறுத்த ரூபா 9,700,000 இற்கு உடன்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 5,446,039 செலவிடப்பட்டிருந்தது. உடன்பட்ட காலத்தை விஞ்சியிருந்த அக் கருத்திட்டத்தினூடாக எதிர்பார்த்த நோக்கங்கள் ஏதுவும் அடையப் பெற்றிருக்கவில்லை. | நாட்டினுள் நிலவிய நிச்சயமற்ற நிலைமை மற்றும் எரிபொருள் பிரச்சினை காரணமாக கருத்திட்ட நடவடிக்கைகள் தாமதித்த போதும் 2023 ஜுன் 30 அளவில் அந்நடவடிக்கைளை பூர்த்தி செய்யவுள்ளதாக. | உடன்பட்ட காலத்தினுள் கருத்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |

## 3. 4 மனிதவள மகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி ஒப்பந்த அடிப்படையில் 20 ஊழியர்களை ஆட்சேர்த்து மீளாய்வாண்டினுள் ரூபா 9,087,356 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு பல சந்தர்ப்பங்களில் ஆளணி பதவி எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்ள கோரியுள்ள போதும், இது வரை அங்கீகாரம் கிடைக்கவில்லையென. | ஆளணி எண்ணிக்கையை அங்கீகார எல்லையினுள் பேணிக் கொள்ள வேண்டும். |